★ தொடரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 19 இதழ் 149
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 3-7-1994

பொலிஸ் கைதி கோரிக்கை

(கொழும்பு)

யுத்தநிறுத்தம் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வாகா. முடிவில்லாது தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு ஏற்புடைய தீர்வு காணப்படவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலுள்ள பொலிஸ் கைதிகளில் ஒருவர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ் நகருக்கு விஜயம் செய்த பி.பி.சி. நிருபர் ஜோர்ஜ் ஆனிக்கு

(6ம் பக்கம் பார்க்க)

கரும்புலி நாள்
தேசியக்கொடி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

கரும்புலி நாளின் போது (ஜூலை 5) தமிழீழ தேசியக் கொடியை சகல பாடசாலைகள், பொது நிறுவனங்கள், [illegible], கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய இடங்களில் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு முறைப்படி ஏற்றிடவேண்டும், மலர் அஞ்சலி செய்து தமது தமிழீழ தேசத்தின் மதிப்பை போற்றுவோம்.

6-ம் பக்கம் பார்க்க)

அரசு மற்றும் அதிகாரிகளின் பெரும் ஊழல் கண்டுபிடிப்பு!

பிரி. உளவு நிறுவனம் அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும், சிரேஷ்ட அதிகாரிகளும் பல ஊழல்களிலும் துஷ்பிரயோகங்களிலும் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்று பிரித்தானிய பொருளாதார அமைப்பின் உளவுச்சேவை நிறுவனம இலங்கை பற்றித் தயாரித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கோரியிருந்த ரெண்டர் கோரிக்கைகளில் பலவற்றில் மறைந்த ஜனாதிபதியின் காலத்தில் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

ரெண்டர் கோரிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த திறைசேரி அதிகாரி ஒருவர் ஊழல் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

(6ம் பக்கம் பார்க்க)

இன்று கரும்புலிகள் உருவப்பட ஊர்தி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகளின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தியானது இன்று காலை 10மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு யாழ் பலாலி வீதியூடாக உரும்பிராய்ச் சந்தி மருதனாமடச் சந்தி, சுன்னாகம், [illegible]லடிச்சந்தி, [illegible], சித்தன் கேணி, [illegible]ச்சந்தி, மானிப்பாய், ஆனைக்கோட்டையூடாக மீளவும் யாழ் நகர பஸ் நிலையத்தை வந்தடையும்.

இவ்வூர்தி வரும்போது வீதிகள் தோறும் அணிதிரண்டு, விளக்கேற்றி, மலர் தூவி அஞ்சலிப்போம். இவ்வூர்தியுடன் இணைந்து காவடி நிகழ்வும் நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது

ஏறுவூரில் பொலிஸ் பலி
ஆயுதமும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு- ஏறுவூரில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த 25ம் திகதியன்று இச் சம்பவம் இடம்பெற்றது. மேற்படி தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிசாரிடமிருந்த ரீ56 ஒன்றுரக துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய ரவைக்கூடு ஒன்றும் நடுத்தர ரவைகள் 60 என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஐ.தேக.-பொதுசன முன்னணி போட்டி தேர்தல் பிரசாரம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் வெவ்வேறு கோணங்களில் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்க இருக்கின்றன என்று "ராவய" ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஐக்கிய தேசியக் கட்சி முக்கியமாக சந்திரிகா குமாரணதுங்கவை இலக்கு வைத்துத்தான் தனது பிரச்சாரத்தை ஆரம்பிக்க இருக்கிறது. நிர்வாண உடம்பு ஒன்று சந்திரிகாவின் முக

(6ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. வை தோற்கடிக்க புதிய அமைப்பு உருவாகிறது

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கு தென்னிலங்கையில் புதிய அமைப்பு ஒன்று உருவாகி வருகின்றது என்று [illegible] "சத்தேமிபலிக" தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜே.வி.பி. இளைஞர் பிக்குகள் இறந்த பொருளாதார [illegible] ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்க இருக்கின்றது.

வேறொரு அமைப்பின் உறுப்பினர் ஆர்[illegible] தெரி

(6-ம் பக்கம் பார்க்க)

உயிராயுதம் ஒளிப்பதிவு நாடா வெளியீடு!

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் நிறுவனத்தினரால் "உயிராயுதம்" எனும் ஒளிப்பதிவு நாடா வெளியிடப்படவுள்ளது.

இதுவரை வீரச்சாவை தழுவிக்கொண்ட 27 கரும்புலிகளின் காவியங்கள், நேர்காணல் உரையாடல், அவர்களது செயற்பாடுகள் தாக்குதல் நடக்கும் வரை [illegible] இறுதியாக [illegible] சென்று உறுதியுடன் எதிரி மீது வெடித்து

(6-ம் பக்கம் பார்க்க

தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள்

(கொழும்பு)

ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 8ம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு தபால்கள் போரின் சேருவதில் தாமதம் ஏற்படுவதினால் யாழ்ப்

(6ம் பக்கம் பார்க்க)

உயர் தலைவர்கள் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உயர் தொழில் புரிபவர்களை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மருத்துவம், சட்டம், பொறியியல், கணக்கியல்,

(6ம் பக்கம் பார்க்க)

டென்மார்க்கும் ஈழத்தமிழரை திருப்பியனுப்ப நடவடிக்கை!

(கோபன்ஹேகன்)

டென்மார்க்கிலுள்ள இலங்கைத் தமிழரை திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான உடன்பாடு ஒன்றில் இலங்கை அரசும் டென்மார்க் அரசும் விரைவில் கைச்சாத்திடவுள்ளதாக கூறப்படுகிறது; இதற்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்குமிடையில் இடம்பெற்றுள்ளது.

சுவிஸிலுள்ள ஈழத் தமிழரை திருப்பியனுப்புவதற்

(6-ம் பக்கம் பார்க்க)

முல்லையில் திடீர் மோதல்
போராளி வீரச்சாவு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் கடந்த 30-ம் திகதியன்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே எதிர்பாராத மோதல் ஒன்று ஏற்பட்டது.

இம்மோதலின் போது முன்னாள் [illegible] சேர்ந்த [illegible]

(6ம் பக்கம் பார்க்க)

கல்வி விளம்பரம்

A/L இந்து சமயம்
9 வருட வினாத்தாள்கள்

கடந்தகால 9 வருட இந்து சமய (பகுதி I, பகுதி II) தொகுப்பு நூல் சகல பிரபல புத்தகக் கடைகளிலும் விற்பனைக்கு வந்துவிட்டது.

ஏ 4184

O/L கணிதம்

ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடைவதற்கு குறைந்த காலத்தில் கற்பிப்பதில் 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட வகுப்புக்கள் நடத்தப்படும். ஆறுமுகநாதன், 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திர வீதி, சுண்டிக்குளி. (இ-1106)

டில்கா வாச் அன்
றேடியோ வேக்ஸ்

சகலவிதமான மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி; தலைமையகம்: 284 [illegible] வீதி, ([illegible] - [illegible] அருகில்) யாழ்ப்பாணம்.

(எ-4183)

வைத்தியம்

[illegible], (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா முட்டு வாதநோய்களின் வலிப்புநோய், பீநிசம், தலையிடி, [illegible], சரும நோய்கள், [illegible]. இரத்தப் போக்கு, [illegible], [illegible], மகப்பேறின்மை, [illegible] குறைவு, மூலவியாதி, [illegible] முதிர்வோர் [illegible]. சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். [illegible] வைத்திய கலாநிதி இ. இராசரத்தினம் 181, 8-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். இ-1085

சூழல் மாசுபடாதிருப்பது யாழ்ப்பாணத்தில்தான்

— கல்வியாளர் பென்னவிங்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண மக்கள் அரசினால் எதிர்நோக்கும் கஷ்டங்களினால் இயற்கை அவர்களுக்கு பல நன்மைகளை வழங்குகின்றது. இங்கு எரிபொருள் பற்றாக்குறை, வாகன போக்குவரத்து குறைபாடுகளால் மக்கள் அமைதியுற்ற தமது பயணத்தை துவிச்சக்கரவண்டி மூலம் நிறைவுசெய்வதனால் உடல் உறுதிபெறுவதுடன் வாகன போக்குவரத்து இல்லாமல் சூழல் மாசடைவதால் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடிகின்றது. இது உலகில் எங்கும் கிடைக்கமுடியாத இயற்கையின் கொடை. இது நெருக்கடிநிலை முடிவுக்கு வந்தாலும் மாற்றமடைவதாக இருக்குமா என்பது சந்தேகம்."

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னைநாள் விரிவுரையாளர் திரு. பென்[illegible], மூத்த எழுத்தாளர் வரதரின் எழுபது அகவைநிறைவினையொட்டி நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார். இந்நிகழ்வு சுண்டிக்குளியூரிலுள்ள ஆறுமுகம் செற் ஒழுங்கை பாலகந்தரம் திரு இல்லத்தில் "சொக்கன்" தலைமையில் நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; யாழ்ப்பாணத்தில் பெண்களின் நிலை உயர்ந்துவருவதை காணமுடிகிறது. 1954ல் நான் இங்கு வந்தபோது இருந்த நிலையை விட இப்போது பெண்கள் சாதாரண தமது பணியினை நிறைவு செய்து உயர்நிலையை பெற்று வருவது வளர்முகநாடுகளுக்கு ஏற்புடையது போல் உள்ளது. சீதனம் தவிர்க்கப்படவேண்டும் என்பது மிக நல்ல விடயம். அது தீவிரமாக தடுக்கப்பட வேண்டுமென்றார்.

எறிகணை வீச்சு மூலம் வீசப்படும் [illegible] மக்கள் உயிரிழப்பதை வேதனையோடு நோக்க வேண்டியுள்ளது என்றார்.

வைபவத்தில் பேராசிரியர் கொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ், டொமினிக் ஜீவா, து. வைத்திலிங்கம், கவிஞர் [illegible] ஐயா சச்சிதானந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

எஸ்-இ

"சன சமூக நிலையங்களால் கிராமத்தில் அளப்பரிய பணிகளை செய்யமுடியும்"

(கொழும்புத்துறை)

"ஒவ்வொரு கிராமத்திலும் மாநகரசபை, பட்டின சபை, நகரசபைகளிலும் இயங்கும் சனசமூக நிலையங்கள் அப்பகுதியின் பல்வேறு தேவைகளையும் முழுமனதுடன் செயற்பட்டு நிறைவேற்றி வைக்க முன்வரவேண்டும். கிராம அபிவிருத்தி சமூக ஒற்றுமை பொதுநலத்தொண்டு போன்றவற்றில் சனசமூக நிலையங்களின் செயற்குழுவினர்கள் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற மாதாந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்திய [illegible] மறைத்திரு ச. ஜோ. ஜெயக்குமார் கூறினார்.

நிலைப் போஷகர் திரு. ஆ. பெனடிக்ட் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சனசமூக நிலையங்கள் கிராமத்தில் அளப்பரிய பணிகளைச் செய்யமுடியும். விளையாட்டுத்துறையில் ஆற்றல்களை வளர்க்கவும் சமயத்துறையில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் பாலர் பாடசாலைகள் சுகாதார சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்யவும் இந் நிலையங்கள் பெரிதும் உதவ முன்வர வேண்டுமென்றார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர் திரு [illegible], பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். [illegible] ஆகியோர் உரைநிகழ்த்தினர். -154

கர்ப்பிணித்தாய்மார்களுக்கு இரத்த சோகை நோய்

(உடுவில்)

"யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய ஆய்வுகளின்படி இங்குள்ள அனைத்துக் கர்ப்பிணித் தாய்மார்களும் இரத்தச் சோகை நோய்க்குட்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இரத்தச்சோகை நோய்க்குக் காரணம் போதிய போஷாக்கின்மையே ஆகும்"

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர்பிரிவு நடத்தும் போஷாக்கு வார இறுதி நாள் நிகழ்வில் கருத்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக சமூகமருத்துவத்துறை பேராசிரியர் டாக்டர் கி. எம். நச்சினார்க்கினியன் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதேசச் செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் டாக்டர் நச்சினார்க்கினியன் மேலும் கூறியதாவது:

போஷாக்கின்மை காரணமாக பாதிக்கப்படும் ஒரு சமுதாயம் எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தை எதிர்நோக்கும். கர்ப்பிணித் தாய்மார் போஷாக்குள்ளவர்களாக இருந்தால்தான் சுகதேகியான குழந்தையைப் பெறமுடியும்.

இன்று எம் நாட்டில் 20 முதல் 30 சதவிகிதமான குழந்தைகள் தமது வயதிற்கேற்ப நிறை, உயரம் இல்லாமல் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் பல வருடம் போஷாக்குக் குறைவின் வெளிப்பாடே ஆகும்.

இரண்டாவது பெரும் தாக்கமாக அமைவது இரத்தச் சோகை நோயாகும். பெரும்பாலும் பாடசாலைப் பிள்ளைகளில், குறிப்பாகப் பெண்பிள்ளைகளே இரத்தச் சோகை நோய்க்கு உள்ளாகி வருகின்றனர்.

போஷாக்கின்மையால் பலர் உளரீதியான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். விற்றமின் ஏ சத்துக் குறைவே இதற்குக் காரணம். இதனால் இளம் சந்ததியினரின் கண் பார்வை குறைவடைந்து வருகின்றது. போஷாக்குக் குறைவால் ஏற்படும் விளைவுகளை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். 109

செய்திச்சிதறல்

முதலுதவி நிலையம்

(நெல்லியடி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினரும், பருத்தித்துறை பிரிவின் முதலுதவிப் பகுதியினரும் ஒன்று சேர்ந்து ஓர் முதலுதவி நிலையம் [illegible] பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (160

மருந்து தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் பலத்த மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. -72

மண்ணெண்ணெய் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு தலா மூன்று லீற்றர் மண்ணெண்ணெயை வழங்கி வருகிறது. அத்துடன் "உ" பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோ சீனியை கிலோ 60 ரூபா 50 சதத்திற்கு விநியோகித்து வருகின்றது. (72)

மீண்டும் இறமான இறைச்சி விற்பனை

நவாலி சந்தைக்குள் இயங்கிவந்த மாட்டிறைச்சி விற்பனை நிலையம் மீண்டும் அதே இடத்தில், திங்கட்கிழமை முதல் (4-7-94) விற்பனையை ஆரம்பிக்கவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

மாரிமுத்து கந்தசாமி
விஞேத் வீதி, ஆனைக்கோட்டை.

(இ 1113)



3-ம் ஆண்டு நினைவஞ்சலி

★

மலர்வு :
24-03-1934

★

உதிர்வு :
06-07-1991

★

திதி :
03-07-1994

★

தவில் மேதை
இணுவையூர் **N. R. சின்னராசா**

தவிலுக்கு ஒரு மேதை அவன்.........
ஓசையின்றி "பூபாளம்" ஒலிக்கின்றது
[illegible] சரம் [illegible]
கலங்குகின்றோம் உமர் பிரிவில்
நினைவில் நிறைந்த நெஞ்சின் நினைவலைகள்

சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!! சாந்தி!!!!

சிங்கம்ஸ் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-4187)

இன்று

(யாழ்ப்பாணம்)

வீரவேங்கை [illegible] நினைவு முன்பள்ளி பாலர் பாடசாலை குழந்தைகள் மகிழ்வு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் [illegible] வீதியில் அமைந்திருக்கும் புனித குடும்ப மேற்கு அ. மி. வித்தியாலயத்தில் நடைபெறும். யாழ். மாவட்ட [illegible] [illegible] அதிபரும், [illegible] ஊர்காவற்றுறை பிரதேச செயலருமான திருமதி [illegible] முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். -162

0 0 0

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இலங்கை சீமெந்து நிறுவன தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு காலை [illegible] திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

மொழிபெயர்ப்பாளர் தேவை

இலத்திரனியல் (Electronic) கணனி (Computer) பௌதீகவியல் (Physics) ஆகிய துறைகளில் நன்கு அனுபவமுள்ள ஆங்கிலத்தில் உள்ள புத்தகத்தை தமிழில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு மொழிபெயர்ப்பாளர் உடன் தேவை. சம்பளம் மாதம் 4000/-க்கு மேல் வழங்கப்படும் நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ உங்கள் தகைமைகளை குறித்து 15-07-94க்கு முன் விண்ணப்பிக்கவும். முழுநேரமாக அல்லது பகுதிநேரமாக வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்

விபரங்களிற்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

(இ-1103)

தேர்தல்கள் முடிந்த பின் எந்த அரசும் தமிழர் பிரச்னை பற்றி சிந்திப்பதேயில்லை!

— லங்காதீபவிற்கு குமார் பேட்டி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியாலோ தமிழினத்திற்கு விடிவு இல்லை. அரசியலில், தமிழ் மக்கள் தம்மைத் தாமே பலப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையில் உடனடியாக இறங்க வேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் 'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அளித்த பேட்டி கேள்வி, பதிலாகத் தரப்படுகிறது.

கேள்வி: தமிழ்க் கட்சித் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் நான் முக்கிய கவனம் செலுத்தி வருகிறேன். தமிழ் மக்கள் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரை நியமிக்க வேண்டும் என்பதை நான் வலுவாகச் சொல்லி வருகின்றேன்.

கே: நாட்டில் இரு பெரும் கட்சிகள் போட்டியிடும் இந்த நேரத்தில், எதற்காக இப்படியான கருத்தைச் சொல்கின்றீர்கள்?

ப: இது சொல்லித் தெரிய வேண்டிய காரியமல்ல. ஐ.தே.க.வும், சு.க.வும் இவ்வளவு காலமும் இந்த நாட்டில் உள்ள இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ, இந்த நாட்டுத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை; பல தடவை சந்தர்ப்பம் வந்தும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயலவில்லை. நான் முக்கியமாகச் சொல்கின்றேன், இந்தப் பிரச்சினையை இந்த இரண்டு கட்சிகளும் தீர்க்க உண்மையான விருப்பமில்லை.

இதனால் தான் தமிழ் மக்கள் இந்த இரண்டு கட்சிகளுக்கும் எதிராக இயங்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஆனபடியால் இந்த இரண்டு கட்சிகளுக்கும் வாக்குகளைக் கொடுக்காது, நாம் நியமித்த நமது பிரதிநிதிகளுக்கு வாக்களித்தால் எமது பலத்தை உலகுக்குக் காட்டமுடியும்.

கே: உங்கள் முடிவு இனவாத ரீதியாக இருக்கின்றதே. அது பற்றி...?

ப: ஏன் நீங்கள் இனவாதி என்று எங்கள் மேல் குற்றம் சுமத்துகின்றீர்கள்? கடந்த 50 வருட காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் எதைச் செய்து காட்டின?

கே: உங்கள் கருத்துப்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக நீங்கள் நிறுத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகிறதே?

ப: அப்படியில்லை. நீங்கள் நினைப்பது பிழை. இது பற்றிப் பேசுவதால் நான் போட்டியிட வேண்டும் என்ற கருத்தல்ல. இந்தத் தேர்தலிலும் தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் மூலம் எமது பிரச்சினையை உலகுக்குக் காட்டமுடியும்.

கே: அப்படியானால் இதற்குப் பொருத்தமான தமிழ்ப் பிரதிநிதி யார்? இது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லையா?

ப: நான் இது பற்றிப் பலரிடம் பேசியுள்ளேன். ஒருவரும் தீர்மானம் எடுக்கவில்லை. திரு. தொண்டமானுடன் பேசும் போது, அவர் தனக்கு வயது போய்விட்டது என்று கூறினார். அஷ்ரப் மற்றும் சில தமிழ்த் தலைவர்களுடனும் பேசியுள்ளேன்.

கே: ஒருவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வராவிட்டால், என்ன தீர்மானம் எடுப்பீர்கள்?

ப: ஒருவரும் வராதுபோனால் அது பற்றிச் சிந்திப்பேன். இனிமேலும் பொறுக்க இயலாது. சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு [illegible] கொடுத்தது போல வாக்குகளைப் பெற்ற பின்பு, மெல்ல மெல்லமாக அவர்களிடமிருந்து விடுபட்டுப் போனார்கள். இப்படித் தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைகளுக்கு எதிரானவன் நான். இப்படியான ஆசை வார்த்தைகளுக்குத் துணை போகவேண்டாம் என்று தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கே: கடந்த 17 வருட காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் தமிழ் மக்கள் எந்தவிதப் பலனும் அடையவில்லை. காலத்திற்குக் காலம் எதிர்க் கட்சிகளுக்கு ஆதரவு அளித்துச் சில உரிமைகளைப் பெற்றிருக்கலாம் அல்லவா?

ப: இவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள்தான். எதிர்க்கட்சிகள் இப்போது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறுவார்கள். பதவிக்கு வந்தவுடன் தங்களின் முதல் வேலை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தான் என்பார்கள். இது [illegible] நோயாளிடம் அதிகாரம் கொடுக்கிறது மாதிரி தான். பிறகு மாகாண சபையை நீக்க வேண்டும் என்பார்கள். இதற்கு சிறிது காலம் சென்று விடும். பின்பு விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு சில நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகக் கூறுவார்கள். இதற்கும் கொஞ்சக் காலம் போய்விடும். இந்த வேலைகள் எல்லாம் செய்து முடிக்க அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வந்து விடும். இதனால் தமிழர் பிரச்சினையைப் பற்றி மறந்தேவிடுகிறார்கள். இதனால் முடிவிலும் பார்க்க தமிழ் மக்கள் மேலும் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிவரும். இப்படியானவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்குகள் செலுத்தி ஏமாற மாட்டார்கள்.

கே: ஐக்கிய தேசியக் கட்சியை தோல்வியுறச் செய்ய ஸ்ரீமா அம்மையாரின் பொதுசன ஐக்கிய முன்னணி எதிர்க் கட்சிகளோடு கலந்தாலோசித்து வருகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: கடந்த 50 வருடகாலமாக இது போன்ற பேச்சு வார்த்தைகள் எத்தனை தரம் நடந்து முடிந்தன? எங்களுக்கு என்ன கிடைத்தது? 1983-ம் ஆண்டு நானும் இன்னும் 10 கட்சிகளும் சேர்ந்து ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் செயற்பட்டோம். அப்போது என்ன செய்தார்கள்? ஜனாதிபதி தேர்தல் முடிந்தவுடனேயே 72 மணித்தியாலத்துக்குள் பொதுவேலைத்திட்டம் ஒரு பக்கத்தில் தூக்கி எறியப்பட்டது. இவர்களுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமா?

கே: தொண்டமான் காலத்துக்குக் காலம் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து பல சலுகைகளைப் பெறுகிறார். அதே மாதிரி நீங்களும் செயற்படலாம் அல்லவா?

ப: தொண்டமானின் பிரச்சினை எங்களது பிரச்சினை போன்றதல்ல. அவர் கேட்டுப் பெறுவது கோரிக்கைகள். ஆனால் நாங்கள் கோரிக்கைகளை கேட்கவில்லை. நாங்கள் கேட்பது எங்களது அடிப்படை உரிமைகளாகும். தொண்டமான் கேட்பதை தேர்தல் முடிந்த பின் கொடுத்துவிடுவார்கள். இலங்கைத்தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது எவர்கள் கையிலும் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ தேர்தலுக்கு முன்பு இனப்பிரச்சினை பற்றி ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து அறிவிக்கட்டும். நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை. இப்படி இவர்கள் இருவரும் ஒருமித்து தமிழர் பிரச்சினையில் ஒரு முடிவு எடுத்து அறிவிக்காது போனால் மாறி மாறி தமிழர் பிரச்சினை தொடர்பாக வரும் கட்சிகளுக்கு எதிராகவே செயற்படுவோம். இப்போது தேவையேற்பட்டால் [illegible] உடனடி நடவடிக்கை எடுப்பேன்.

தமிழாக்கம்: மணிசேகரன்

அகதிகளை பராமரிக்க மாதம் 5 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

அசம்பாவிதங்கள் காரணமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகியிருப்போரை பராமரிக்க அரசு மாதாந்தம் ஐந்து கோடி ரூபாவை செலவு செய்து வருகிறது.

புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் புள்ளி விபரக் கணக்குகளின்படி சுமார் ஐந்து லட்சத்து 50 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுள் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் 48 சேமநலப் பிரிவு நிலையங்களில் தங்கியுள்ளனர். ஏனையோர் தமது உறவினர்களுடனும் வேறு இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களில் இதுவரை சுமார் ஒரு லட்சத்து 41 ஆயிரம்பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதற்கென அரசு இதுவரை 78 கோடியே 48 லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. -இ

1000 கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தெரிவு

(கொழும்பு)

கணித, விஞ்ஞான ஆசிரியர்களாக ஆயிரம் பேரை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கணித, விஞ்ஞான பாடங்களைப் போதிப்பதற்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் நான்கு வருடப் பயிற்சி ஆசிரியர்களாக கடமையாற்றுவார்கள். பயிற்சிக் காலத்தின்போது இவர்களுக்கு 2000 ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தின்பின் பரீட்சை ஒன்றின்மூலம் இவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். -இ

ஐ. ஐ. தே. மு. உறுப்பினர் ஐ.தே.க. சார்பில் போட்டி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அரசியல் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளனர்.

திருவாளர்கள் சந்திரா கன்கந்த, வின்சன்ட் பெரேரா, லக்ஷ்மன் செனவிரத்ன, ஆரியரத்ன ஜயதிலக, பிரேமரத்ன குணசேகர, எஸ்.ஏ. முதுபண்டா ஆகியோரே ஐ.தே.க. வேட்பாளர்களாக போட்டியிடவுள்ள உறுப்பினர்களாவர். -இ

கிராம உத்தியோகத்தர்களின் புதுமுக பயிற்சிநெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1992-ம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கான புதுமுகப் பயிற்சி நெறி இன்று 3-ம் திகதி காலை 8-30 மணிக்கு [illegible] கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்பில் ஆரம்ப நாள் பயிற்சி, திணைக்கள ரீதியான பயிற்சி, பிரதேச செயலகங்களின் பயிற்சி ஆகியன இடம் பெறவுள்ளன.

மேலதிக பயிற்சிகள் அடுத்த மாதம் 5-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதி வரை நடாத்தப்படவுள்ளதாகவும் மேலதிக விபரங்கள் ஆரம்பநாள் பயிற்சியின்போது தெரிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் கடிதங்கள் அவ்வவ் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (162-ஏ)

வடக்கு - கிழக்கு பற்றி கொள்கை அறிக்கையை சு. க. வெளியிடவேண்டும்!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினை குறித்தும், மாகாணசபைகள் குறித்தும் அதன் கொள்கையை பகிரங்க அறிக்கைமூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெளிவுபடுத்த வேண்டும்.

மக்கள் ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இவ்வாறான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இதேவேளை பொதுசன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுமாறு திருமதி ஸ்ரீமணி அத்துலத்முதலிக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்க அழைப்பு விடுத்துள்ளார். -இ

வர்த்தமானி பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவை தரம் III (பொது)க்கு ஆட்களை சேர்ப்பதற்கான பதவி வெற்றிடம், கல்வி அமைச்சின் கீழுள்ள அதிபர் சேவையின் தரம் I, தரம் II, தரம் III க்கு ஆட்களை சேர்த்தல், கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞான, கணித பயிலுனர் ஆசிரியர்களை தெரிவு செய்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வர்த்தமானியினை 'ஈழநாடு' காரியாலயத்தில் பார்வையிடலாம். (இ)

கொட்டாஞ்சேனையில் மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் அண்மையில் விமானப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இருபெண்கள் ஒரு ஆண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இம் மூவர் மீதும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இதுவரையில் இவர்கள் விடுதலை செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. ஏ-இ

நல்லூர் இளைஞர் நூலகம்.

இளவயதினரை தாக்கும் 'றூமாற்றிக் காய்ச்சல்'

வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சீர்மாறன்

றூமற்றிக் காய்ச்சல் (Rheumatic Fever) என்பது சிறுபிள்ளைகளிலும் இளம்பிராயத்தினாலும் ஏற்படுகின்ற முக்கியமானதொரு மருத்துவப் பிரச்சினையாகும். அனேகமாக இந்த வியாதி ஐந்து வயது தொடக்கம் பதினைந்து வயது வரையுள்ளவர்களையே பிரதானமாக முதல் முதலாகத் தாக்குகின்றது. இது ஒரு வகையான பற்றீரியாக் கிருமிகளால் ஏற்படுகின்ற தொற்று நோயாகும் ஏ குறூப் 'ஸ்ரெப்ற்றோகொக்கஸ்' என்கிற பற்றீரியாக் கிருமிகளினாலேயே இந்த றூமற்றிக்காய்ச்சல் சிறுபிள்ளைகளிலும் இளம் வயதினருக்கும் ஏற்படுகின்றது.

உலகம் முழுவதிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள், தூரகிழக்கு நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், தென் அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள சிறுவர்களுக்கு இந்த வியாதி பெருமளவில் காணப்படுகின்றது. தனித்தனிக் குடும்ப, சமூக, சுகாதாரம், வாழ்க்கைத்தரம், தரமான வைத்தியசிகிச்சை, புதிய எதிர்ப்பு மருந்துகள் என்பனவற்றினால் 1920ம் ஆண்டில் இங்கிலாந்தில் சிறுவர்களின் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய [illegible] சதவீதத்தினருக்கு இருந்த இந்தப் பிரச்சினை இப்போது ஏறக்குறைய 0·01% சத வீதச் சிறுவர்களுக்கே ஏற்படுகின்றதாம்.

ஆபத்துக்கள்

இந்த றூமற்றிக்காய்ச்சல் சிறுபிள்ளைகளுக்கும் இளம் வயதினருக்கும், இருதயம், தோல், மூட்டுக்கள் மத்திய நரம்புத் தொகுதி என்பனவற்றில் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்திவிடுகின்றது. மனிதனுடைய இருதயமானது முக்கியமான தசைநார்களைக் கொண்ட நான்கு அறைகளைக் கொண்டது. இவை இடது வலம் பிரதானமாகப் பிரிக்கப்பட்டு மேலேயும் கீழேயுமுள்ள அறைகளை விசேடமான வால்வுகள் (Heart Valves) பிரிக்கின்றன. இந்த வால்வுகள் மிகவும் மென்மையான தோலினால் (Endocardium) போர்க்கப்பட்டிருக்கும் றூமற்றிக் காய்ச்சலை ஏற்படுத்துகின்ற பற்றீரியாக் கிருமிகள் நேரடியாகத் [illegible] டையையே தாக்கும். இதனால் தொண்டை அரிப்பு, உள் நாக்கு வீக்கமடைந்திருத்தல், எச்சில், நீராகம், உணவு என்பன விழுங்குகின்றபோது தொண்டையில் வலி எடுத்தல் அத்துடன் காய்ச்சல் இருமல் காதுவலி, தலையிடி என்பனவும் ஏற்படும். பற்கள் சற்று முன்னே பிதுங்கி வாய் எந்த நேரமும் திறந்திருக்கின்ற பிள்ளைகளுக்கு இந்தப்பிரச்சினை அடிக்கடி ஏற்படும் ஆபத்து இருக்கின்றது. எனவே இதன்போது சரியான முழுமையான சிகிச்சை பெற்றுக் கொள்ளாவிட்டால், உடலிலுள்ள நோயெதிர்ப்பான பாதுகாப்பு முறையில் ஒரு விதமான தாக்கத்தை Autoimmune Reaction ஏற்படுத்திவிடும்.

இதனாலேயே இருதயம், தோல்மூட்டுக்கள், மத்தியபிரதான நரம்புத் தொகுதி என்பன கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும். இதன்போது இடைவிடாத காய்ச்சல், நெஞ்சில் வலி ஏற்படுதல், நெஞ்சு நோதல், களைப்பு இளைப்பு, பஞ்சிபோல அலுப்பாக இருத்தல், சோர்வு, இருதயம் விரைவாகத் துடித்தல் (Tachycardia) மூட்டுக்களில் வீக்கம், நோ, மடக்கவோ மடிக்கவோ நீட்டவோ முடியாது அவஸ்தைப்படுதல், குறிப்பாக முழங்கைமூட்டு, முழங்கால்மூட்டு, மணிக்கட்டுமூட்டு ஆகியன அதிகளவில் பாதிக்கப்படும் மத்தியநரம்புத் தொகுதி பாதிக்கப்படுகின்றபோது (Sydenham's chorea) படிப்படியாக கையில் தன்னிச்சையான அசைவுகள் ஏற்படுதல் [illegible] கனக்குறைவு, விழிப்புக் குன்றல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். தோலில் தாக்கம் ஏற்படுகின்றபோது [illegible] ஏற்படுதல் தோலின் கீழ் [illegible] குறிப்பாக மூட்டுக்களுக்கருகாமையிலும் எலும்புகள் தோலுக்கருகாமையிலுள்ள இடங்களிலும் இந்தப் பிரச்சினை ஏற்படும்.

சிகிச்சை முறை

நோய் ஏற்பட்டதற்கான மருத்துவசரித்திரம், இரத்தப் பரிசோதனை (WBC/DC ESR) இருதயத்தை பரிசோதித்தல் ECG, CXR) போன்றவற்றுக்கு உட்படுத்தப்பட்டு றூமற்றிக்காய்ச்சல் ஏற்பட்டிருக்கின்றதா என்பது உறுதிப்படுத்தப்படுவதோடு, இந்த வியாதியினால் இருதயத்தில் எவ்வளவு தூரம் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. என்பதனையும் நன்கு அறிந்து கொள்ளலாம். நோயினால் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் காய்ச்சல், நெஞ்சுவலி, மூட்டுவலி என்பன தணியும் மட்டும் கட்டாயமாக கட்டிலில் ஓய்வெடுக்கவேண்டும், காய்ச்சல் குறைந்து இருதயத்துடிப்பும் சாதாரண நிலைக்குவந்து இரத்தப்பரிசோதனையும் (Normal WBC/Dc, ESR) திருப்தி என்ற பின்னரே படிப்படியாக ஓய்வை நிறுத்தவேண்டும். நடக்க அனுமதிக்கவேண்டும். பென்சிலின் என்கிற மருந்து ஊசி மூலம் கொடுக்கப்படும். நோயின் கடுமை குறைந்த பின்னர் குளிசைகளாகவும் பென்சிலின் கொடுக்கலாம். பென்சிலின் அலர்ஜியானவர்களுக்கு எரித்திரோமைசின் சல்போனாமைட் என்கின்ற குளிசைகள் கொடுக்கப்படும். றூமற்றிக்கிளினிக் என விசேட சிகிச்சைப்பிரிவே இயங்குகின்றது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தவறாது இந்த விசேட கிளினிக்கிற்கு தவறாது செல்ல வேண்டும். அங்கு இவர்களுடைய இருதயம். இரத்தம் என்பன பரிசோதிக்கப்படுவதோடு பென்சிலின் (Benzathine Penicllin) ஊசியாக போடப்படும். இதன் மூலம் அவர்களுடைய இருதயத்தில் மேலும் பிரச்சினைகளும் ஆபத்துக்களும் ஏற்படாமல் இருக்க பாதுகாப்புக்கிடைக்கும்.

பெண்பிள்ளைகள் இந்த விடயத்தில் மிகவும் முன்னெச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருப்பது நல்லது. ஏனெனில் இவர்களுக்கு இந்த வியாதி ஏற்பட்டு அதுவும் இருதயத்தில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் பின்னர் அவர்கள் திருமணமாகி தாய்மையடைந்து கர்ப்பந்தரித்திருக்கின்றபோது குழந்தை வயிற்றில் வளரவளர நெஞ்சுவலியும், களைப்பு, இளைப்பு, கால்கள் வீங்குதல். இருமல் தலையிடி. மூச்சிழைத்தல் மூச்சுவாங்குதல் என்பன ஏற்படும். அதுவும் குழந்தை பிறக்கின்றபோது நிலைமை இன்னும் மோசமடையும் ஆபத்து இருக்கின்றது.

எனவே றூமாற்றிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பெண்கள் திருமணமாகியதும் அல்லது கருத்தரித்ததும் தமக்குரிய றூமற்றிக்கிளினிக்கிலும் மற்றும் தாய்சேய்பரிசோதிப்பிலும் மகப்பேற்று வைத்தியநிபுணரிடமும் விசேடமாகக் குறிப்பிடவேண்டும். இதன்மூலம் பின்னர் தாய்க்கும், குழந்தைக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தவிர்க்கப்படுவதோடு இலகுவாகவும் குழந்தை பிறக்கின்றபோது (AT - Delivery) தாய்க்கு ஏற்படக்கூடிய உயிராபத்தும் தவிர்க்கப்படும். (இ)

எனது இரு கால்களையும் துண்டித்துவிட்டார்கள்
மரடோனா கவலை

(நியூயோர்க்)

"உடல் வலுவை ஊக்குவிக்கும் போதைப்பொருள் எதையும் நான் பாவிக்கவில்லை என்பதை நான் நிரூபிப்பதற்கு அனைத்துலக உதைபந்தாட்டச்சபை எனக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் தராதது எனக்கு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது" என்று ஆர்ஜன்ரீனாவின் உதைபந்தாட்ட அணியின் தலைவர் டியாகோ மரடோனா குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க தொலைக்காட்சியில் தோன்றிய மரடோனா "நான் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்கு சர்வதேச உதைபந்தாட்டச்சபை எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்காமல், என்னை உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவது தடுத்துவிட்டது.

எனது உடல் வலுவை ஊக்குவிப்பதற்கு நான் போதைப் பொருட்களைப் பாவிக்கவேண்டிய அவசியம் எனக்கில்லை. எனது கால்களை துண்டித்து எனது ஆற்றல்களை அழித்து ஆன்மாவை அழித்துவிட்டது. இந்த சர்வதேச உதைபந்தாட்டச் சபை எனக் குற்றம் சாட்டினார்.

இதுபற்றி ஆர்ஜன்ரீனா மக்களின் [பெரும்பாலானோர் கருத்துத் தெரிவிக்கையில், எமது வீரர் மரடோனாவை வீழ்த்துவதற்காக உலக உதைபந்தாட்டச் சபை செய்த பழிவாங்கல் இது என்று கூறுகின்றனர்.

மரடோனாவை அவரது குடும்பத்தோடு நிம்மதியாக வாழவிடவேண்டும்' என்று ஆர்ஜன்ரீனாவின் உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

மரடோனாவின் உதைபந்தாட்ட சாகஸ விளையாட்டுகளை ஆர்ஜன்ரீனாவின் தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் போட்டுக் காண்பிப்பதாகவும் மரடோனா தற்போது அமெரிக்காவிலிருந்து வெளியேறி ஆர்ஜன்ரீனா சென்று விட்டதாகவும் தெரியவருகிறது. (வி-இ)

தபால் பொதிகளை அனுப்ப ஏற்பாடு

(மானிப்பாய்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் [illegible] கப்பல் மூலம் முதல் தடவையாக 20 தபால் பொதிகளை யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லவுள்ளது.

இதுவரை 15 தபால் பொதிகள் மாத்திரமே. கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. மேலதிகமாக எடுத்துச் செல்லப்படும் பொதிகளுடைய யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க தகவல்கள் உடன் போய்ச் சேர்வதற்கு வசதி ஏற்படுமென்றதாக தபாலதிபர் திரு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். 71-இ

கிளிநொச்சியில் கொள்ளை முயற்சி
பயணிகள் முறியடித்தனர்

(கிளிநொச்சி)

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த பயணிகளிடம் கிளிநொச்சி நகரில் மேற்கொள்ளப்பட்ட இருந்த கொள்ளை முயற்சி பயணிகளால் முறியடிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற கிளிநொச்சியில் உள்ள பழைய புகையிரத நிலையக் கட்டிடத்தில் தங்கியிருந்தபோதுகூர்மை ஆயுதத்துடன் வந்தஒருவர் பயணிகளிடம்கொள்ளை முயற்சியில் ஈடுபட்டபோது பயணிகள் துணிவாக எதிர்த்துப் போராடவே அவர் அங்கிருந்து ஓட்டம் எடுத்தார்.

இச்சம்பவம் இம்மாதம் 2ம் திகதி நள்ளிரவு இடம்பெற்றது. 83-இ

கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணிக் கந்தசாமி கோவில் கொடியேற்ற உற்சவம் இன்று மூன்றாம் திகதி காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

13ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 14ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். ம

ஐ.தே.க. வெல்லுமாம்
காமினி நம்பிக்கை

(கொழும்பு)

இந்த நாட்டை புதியவேகத்தில் முன்னேற்றுவதற்கு இருக்கும் ஒரே கட்சி ஐக்கிய தேசியக்கட்சியே எனவே ஆகஸ்ட் மாதம் நடைபெறும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி எவர் எவ்விதமாகக் கூறினாலும் வெற்றி அடைந்தேதீரும் என்று அமைச்சர் காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித்தேர்தலில்தோல்வி அடையலாம் என்று பயந்து தான் பாராளுமன்றத் தேர்தல் முதலில் அறிவித்தது என பதில் உண்மையில்லை வெற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கே நிரந்தரம் என்றாகிவிட்டது. என்று அவர் மேலும் கூறினார். ம-இ

3 'கபினட்' அமைச்சர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை!

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மூன்று கபினட் அமைச்சர்கள் போட்டியிடமாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பெயர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

உயர்கல்வி, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அநுர பண்டாரநாயக்கா வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரே, [illegible] அமைச்சர் வே. என். [illegible] ஆகியோரே இந்த மூன்று அமைச்சர்களாவர்.

இதேவேளையில் ஜனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் விக்கிரம வீரசூரிய, லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் அமுனுகம, பாராளுமன்ற குழுக்களின் முன்னாள் பிரதித் தலைவர் சூரியபெரும, சர்வோதயத் தலைவர் ஏ. டீ. ஆரியரத்ன ஆகியோரின் பெயர்களும் ஐ. தே. க. வின் தேசியப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. -இ

மணிவாக்கு

வீரமில்லாத மக்களைப் பெற்ற நாடு அடிமை நாடாகவே இருக்கும்.
- நெப்போலியன்

நமது நோக்கு

கருணை யார் மீது?

பொலனறுவையில் விவசாயிகள் போர்க்கொடி தூக்கினார்களா? எதிர்க்கட்சியினர் மேலும் தூண்டுதல் அளித்தால், விவசாயிகளின் வாக்குகளை ஒட்டுமொத்தமாக இழக்க நேரிடும் என்பதை இறுதியில் உணர்ந்தார்?

அமைச்சர் காமினியின் மைத்துனர் விக்கிரம வீரசூரிய அங்கு விரைந்திருக்கிறார். சகோதரத் தலைவர் ஏ. டீ. ஆரியரத்தினாவையும் அழைத்துச் சென்றிருக்கிறார்.

விவசாயிகளை அமைதிப்படுத்தி வென்றெடுக்க அவர்களின் கோரிக்கை என்ன?

விவசாயிகள் கடன்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும். மத்திய வங்கி இதனை ஏற்றுள்ளது. இரண்டு லட்சத்திற்கு மேல் அது பொறுக்க வேண்டும்.

அதுமாத்திரமல்ல — 50,000 தெளி கருவிகள் சீனாவிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டுக் குறைந்த விலையில் விநியோகிக்கப்படவுள்ளன. விவசாய இடு பொருட்கள், மருந்து வகைகள் குறைந்த விலையிற் கொடுக்கப்படவுள்ளன. தெற்கு விவசாயிகளுக்குக் கிடைக்கிற திசைதான்!

இங்கு — விவசாயிகள் நிலபுலன்களை இழந்து, வீடு வாசல்களை இழந்து, நிர்க்கதியாக்கப் பட்டிருக்கிறார்கள், இராணுவ நடவடிக்கைகளால்!

பொருளாதாரத் தடைகளால், விவசாயத்தை முழுமையாகச் செய்து பலன்பெற முடியாது தவிக்கிறார்கள்.

குறிப்பாக — கிழக்கிலே இராணுவத்தினரின் இடையூறுகளால் விவசாயிகள் படும் தொல்லைகள், தாக்குதல்கள் தொடருகின்றன.

இங்கு வருகைதந்த சகோதரத் தலைவர், இவைகளை நேரிற் கண்டு, ஜனாதிபதிக்கு முறையிட்டிருக்கிறார். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

இதே ஆரியரத்தினாவின் அறிக்கைகளுக்கு தெற்கு விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்திருக்கிறது. காரணம் என்ன?

வாக்குவேட்டை மாத்திரமல்ல, தனது இனத்தினர் என்பதால் ஜனாதிபதி விரைந்து தொழிற்பட்டிருக்கிறார்.

தமிழ் விவசாயிகள் இந்த அரசினாற் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு வேறு சான்று வேண்டுமா?

சுவிஸ் தமிழரை திருப்பி அனுப்புவது ஏனைய நாடுகளுக்கு ஒரு பரிசோதனை

(சூரிச்)

இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த தமிழர்களை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசும் இலங்கை அரசும் மேற்கொண்ட ஒப்பந்தம், ஐரோப்பாவிலுள்ள ஏனையோரையும் அனுப்புவதற்கான ஒரு பரிசோதனையாகும்.

இவ்வாறு அகதிகளுக்கான அதிகாரியொருவர் தெரிவித்திருப்பதாக "சண்டே லீடர்" தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலுள்ள தமிழ் அகதிகள் பற்றி அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐரோப்பிய நாடுகளில் தமிழ் அகதிகள் தஞ்சம்கோரலை எடுப்பதால் அவ்வளவு நிரம்பி விட்டது இனி இடமில்லை என்ற சைகை 8-ம் உலக நாடுகளுக்கு தெரிவிக்கப்பட்டுவருகிறது.

1983 முதல் ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையிலிருந்து பெருமளவில் தமிழர்கள் வந்தவண்ணமுள்ளனர். ஜேர்மனியில் 40 ஆயிரம், பிரான்ஸில் 30 ஆயிரம், சுவிற்சர்லாந்தில் 25 ஆயிரம், பிரிட்டனில் 20 ஆயிரம் ஹொலண்டில் 9 ஆயிரம் என தமிழ் அகதிகள் வந்துள்ளனர்.

இவர்களில் 5 வீதத்தினருக்கே முழு அளவிலான தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோர் இலங்கையில் நிலைமை சீரடையும் வரை தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பிரான்ஸில் மாத்திரம் அரைவாசிப்பேருக்கு முழு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் குடியேற்றநாடுகளையும் சேர்த்து பிரிட்டனில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் இலங்கையர் வாழ்கிறார்கள். இவர்களில் 80 வீதத்தினர் தமிழர்கள். 1983 இனக்கலவரத்தின் பின்னர் 20 ஆயிரம் பேரில் 120 பேருக்கு மாத்திரம் "அகதி அந்தஸ்து" ஜெனீவா ஒப்பந்தப்படி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

அகதிகளின் வருகை அதிகரிப்பதால் பிரிட்டன் புதிய சட்டத்தை கொண்டுவந்தது. இதன்படி அகதிகளாக வருபவர்கள் விண்ணப்பங்களுடன் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்படுவோர். நாடு திரும்பும் வரை சிறையில் வைக்கப்படுவர். இச்சட்டம் வந்தபின் அகதிகள் வருகை இங்கு குறைந்து விட்டது.

இலங்கை அரசு தமிழர்களுக்கு தென்பகுதியில் பாதுகாப்பு உண்டு என்று கருத்து வெளியிடுகின்றது. இதனைக் கூறும் நியாயம் நிருபணமானால், சுவிஸ் தமிழர்களை ஐரோப்பாவிலிருந்து திருப்பி அனுப்பலாம். இலங்கையும் ஒரு லட்சம் பேரை உடனடியாக திருப்பி அழைக்க சம்மதம் தெரிவித்துள்ளது. (டே - வி)

புலிகளின் குரல்
நிகழ்ச்சி நிரல்

1994-07-03 ஞாயிறு இரவு

08 01	கரும்புலிகள் தினத்தை முன்னிட்ட சிறப்பு நிகழ்ச்சி ""வெடிகுண்டின் புத்திரர்கள்""
08-30	செய்திகள்
08-40	தொடர் நாடகம் - இலக்கையின் 30ம் ஆண்டு""

1994-07-04 திங்கள் காலை

07-02	மாவீரவணக்கம்
07-15	மணிமாலை
07-30	செய்திகள்
07-35	பத்திரிகைச் செய்திகள்
07-40	தாயகப்பாடல்கள்

பலதும் பத்தும்

இரு ஆளுநர்கள்!

10-6-94 — பகல் 12-45— மேல்மாகாண ஆளுநராகத் தேவமனோகரன் சுவாமிநாதன் பதவிப்பிரமாணம் செய்துள்ளதாக இலங்கை வானொலி உலகிற்கு அறிவிக்கிறது:

""[illegible] கிடைத்ததா?""

—புதிய ஆளுநர், பதவியிலிருக்கும் ஆளுநர் சிவானந்தனைத் தொலைபேசியில் கேட்கிறார் ""என்ன [illegible]! எதுவும் கிடைக்கவில்லையே!"

-இதுபதில்

அலுவலகம் சுறுசுறுப்படைகிறது... பதவி நீக்கக் கடிதம் பறக்கிறது- பி.ப. 1-30 க்கு அவர் கையிற் கிடைக்கிறது

புதியவரை நியமிக்கக் காட்டிய அவசரத்தில் பதவி நீக்கக் கடிதம் அனுப்புவதில் கவனக்குறைவு! விளைவு? 12-45 முதல் 1-30 வரை மேல் மாகாணத்திற்கு இரு ஆளுநர்கள்!

— மயூரன்

எமது இனத்திற்கு ஒரு தனித்துவம் இருக்கிறது

இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அரங்கில் எமது இனத்துக்கு ஒரு தனித்துவம் இருக்கிறது என்பது வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது தொடருகிறும். இன்றைய போராட்டம் எதற்காக என்ற ஒரு கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது. எமது பூமி தமிழரால் ஆளப்பட்டது. எமது இந்தப் பூமியில் நாம் சகல உரிமைகளும் கொண்ட ஒரு சுதந்திரமான உரிமையுடன் பண்புடன் வாழ்வதற்கே இன்றைய போராட்டம் நடைபெறுகிறது.

யாழ். கன்னாதிட்டி காளி கோவில் மைதானத்தில் கடந்த புதன் இரவு நடைபெற்ற மாவீரர் வீரவணக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு திரு. "இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றுகையில்,—

எமது போராட்டம் சர்வதேச ரீதியில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேசமும் எமது போராட்டத்தை இன்று கவனித்துக் கொண்டிருக்கிறது எமது போராட்டம் விடிவு பெறும்போது மக்களும் விடிவு பெறவேண்டும். பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதுவே எமது தலைவரின் சிந்தனையாகும். இதற்காகவே பல திட்டங்களை எடுத்துச் செயல்படுத்தி வருகிறோம்.

நடைபெற இருக்கும் தேர்தலில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன என்கின்ற ஒரு கேள்வி எழலாம். கடந்த காலங்களை எடுத்துக்கொண்டால் பேச்சுவார்த்தைகள் என்றும், வட்டமேசைகள் என்றும், அகிம்சைப் போராட்டங்கள் என்றும் நடத்தப்பட்டு வந்தது. இப்படியான முயற்சிகளில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. இதன் அடிப்படையிலேயே எமது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது.

நாடாளுமன்றத்தின் மூலம் எமது சுதந்திரத்தைப் பெற முடியாது. நாடாளுமன்றம் எமது மக்களின் உரிமைகளை நசுக்கிக்கொண்டிருக்கிறது. ஐக்கியநாடுகள் பல இங்கு வர விருப்பமற்றதாக ஒரு கதை பரவுகிறது. ஆகிய பிரதேசத்தில் இப்படியான ஒரு நிலை ஏற்படுவதை இந்தியா விரும்பாது இன்று ஐ.தே.க., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரு கட்சிகளும் ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட உள்ளன. இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழரின் பிரச்சினைக்கு என்ன கூறுகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம். சந்திரிகா குமாரதுங்க தான் பதவிக்கு வந்தால் புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக கூறுகிறார். எமது போராட்டத்தை அழிப்பதற்காக தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்த இரு கட்சிகளும் இரு நாடகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

—102-வ

இராசி பலன்

03-07-1994

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆனி 19)

தசமி மு. இ. 8.38 வரை; அச்சுவினி ந. ப. 12-20 வரை சித்தயோகம் இராகுகாலம் பி.ப. 4.27 முதல் 5.57 வரை. சுபநேரம் காலை 8-57 முதல் 10-27 வரை.

மேடம்:- உறவினர் மகிழ்ச்சி, குடும்ப லாபம், பாராட்டு.

இடபம்:- மன விரக்தி, தொழில் குறைபாடு, அச்சம்

மிதுனம்:- இனசன மகிழ்ச்சி பணச்செலவு, புத்திரர் செலவு

கடகம்:- வழி தடங்கல், புதியயுக்தி, வரவு

சிம்மம்: [illegible], பிறர்சூழ்ச்சி, மனப்பயம்

கன்னி:- அதிகாரி பகைமை வீண்குழப்பம் உடல் அசதி

துலாம்:- சகோதர உதவி, தொழில் லாபம், பிறர்தவு

விருச்சிகம்:- கலந்துரையாடல். பெண்சகாயம், தெய்வ பக்தி

தனுசு: குடும்பத்தில் மனக்குழப்பம். முரண்பிடித்தல்

மகரம்:- தனிமைப்பட்ட கோபவார்த்தை, போதனை.

கும்பம்: பொதுப்பணி. அறிஞர் உதவி, தானதர்மம்

மீனம்:- கவலை, தந்தை கோபம், மனஇலயமை

ஜோதிடர்

தமிழீழ நீதிமன்றில்....

கோடா தயாரித்தவருக்கு ரூபா 45,000 அபராதம்

(உடுவில்)

பதினைந்து லீற்றர் கோடாவை உற்பத்தி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் உடும்பிராய் மேற்கைச் சேர்ந்த ஒருவர் மீது சுன்னாகம் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் குறிப்பிட்ட நபரை குற்றவாளியாக கண்ட நீதிவான் செல்வி [illegible] 45,000 ரூபா அபராதமும் இரண்டுமாத சிறைத் தண்டனையும் விதித்தார். அபராதப்பணம் கட்டத் தவறினால் மேலும்பத்துமாதசிறைத் தண்டனைக்கும் உத்தரவிட்டார்.

ஒரு லீற்றர் கசிப்பு விற்பனையிலீடுபட்ட மல்லாகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதமும் ஒருமாதசிறையும் விதிக்கப்பட்டது. அபராதம்செலுத்தத்தவறினால் மேலும்இரண்டு மாத சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும்.

மேலும் ஒட்டுறோசிப் போத்தல் கசிப்பு விற்பனை செய்த சுதுமலை வடக்கைச் சேர்ந்த ஒருவருக்கு ஐயாயிரம்ரூபா அபராதமும் இரண்டு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

துவிச்சக்கரவண்டி திருட்டு

பத்துக்கும்மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர் என சந்தேகிக்கப்படும் நவாலி வடக்கு அரசடியைச் சேர்ந்த ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி களவொன்றின் மீது இருநூறுரூபா அபராதமும் ஒருமாதசிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. [illegible] காவல்துறையினர் இவர் மீதானவழக்கினை நெறிப்படுத்தினர்.

-109-வ

"எருவின் மூலம் வளத்தைப் பெருக்கி வளனைப் பெற்றிடுவோம்"

நல்லூர் [illegible]

பொதுத் தேர்தலை யொட்டி

பிரேமாவின் திட்டங்களுக்கு புத்துயிர் அளிக்கடி.பி.முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஐயாயிரம் உருவச்சிலைகளை நாடு பூராவும் நிறுவும்படி ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்கா உத்தரவிட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: ஜனாதிபதி விஜேதுங்கா பதவிக்கு வந்த காலத்தில் பிரேமதாசாவின் நடவடிக்கைகளாலும், திட்டங்களாலும் நாடு வறிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதாகக் கூறி பிரேமதாசா ஆரம்பித்த சில திட்டங்களை ரத்துச் செய்திருந்தார். இதனால் வறிய மக்களின் வெறுப்புக்கு ஆளாகிய ஐ.தே.கட்சி மேல் மாகாண சபைத்தேர்தலில் தோல்வி அடைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

இதை உணர்ந்த ஜனாதிபதி விஜேயதுங்க எதிர்வரும் தேர்தல்களிலும் இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் திட்டங்களுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முனைந்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக வறிய மக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளில் பிரேமதாசாவின் உருவச்சிலைகளை கூடுதலாக அமைக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார் என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. வீ-ரி

கரும்புலிகள் குடியிருப்பு வடமராட்சியில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவாக குடியிருப்பு ஒன்று நேற்றுமுன்தினம் வடமராட்சியில் திறந்து வைக்கப்பட்டது.

கரும்புலிகள் நினைவான குடியிருப்பை முதல் கரும்புலியான கப்டன் மில்லரின் தாயார் திறந்து வைத்தார். அவரே கரும்புலி மில்லர் எனப் பெயர் சூட்டப்பட்ட வீட்டையும் திறந்து வைத்தார்.

மொத்தம் 15 வீடுகள் இக்குடியிருப்பில் உள்ளன. 14 வீடுகளுக்கு 14 கரும்புலிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. (சி)

ஐ.தே.க. பொதுசன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை ஒட்டி [illegible] போஸ்டர்களை விநியோகிக்க இருக்கிறது.

பிரபல பாடகி [illegible]வின் 'கசெட்' ஒன்று வெளியிட இருக்கிறார்கள். அதில் சந்திரிகாவைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுசன ஐக்கிய முன்னணி [illegible] காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் புரிந்த ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தமது பிரசாரத்தை ஆரம்பிக்க இருக்கிறதாம். -ம-வி

ஆறு இலங்கையர் கனடாவில் கைது

(டொரன்ரோ)

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கனடாவுக்கு வந்த பலர் சட்டத்துக்கு விரோதமாக நடந்துகொள்கிறார்கள் என்று கனடாப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக ஆறுபேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டும் பலர் விசாரிக்கப்பட்டும் வருகிறார்கள் என்று [illegible] பொலிசார் தெரிவித்துள்ளனர். ம-வி

சுகாதார தொண்டர் பயிற்சி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினால் நடாத்தப்படும் புதிய சுகாதார தொண்டர்களுக்கான பயிற்சி நாளை 4ம் திகதி தொடக்கம் ஐந்து நாட்களுக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் நோய்த்தடுப்பு, அவசர [illegible] சேவை வசதிகள் பற்றிய விரிவுரைகள் இப்பயிற்சியின் போது இடம்பெறவுள்ளன என்று மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். சி

சாவகச்சேரியில் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு இன்று நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் இரத்ததான வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. சேவை மனமுள்ளோர் முன்வந்து குருதி கொடைவழங்க வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (சி)

கரும்புலிகள் தின கூட்டம்

(யாழ்ப்பாணம்)

[illegible] வர்த்தகர் சங்கம் நடாத்தும் கரும்புலிகள் நினைவு தினக் கூட்டம் இன்று மாலை 3-00 மணியளவில் வர்த்தக சங்கத் தலைவர் திரு. ச. இராசையா தலைமையில் [illegible] பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு. [illegible] மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. [illegible], திரு. [illegible] ஆகியோர் உரையாற்றுவார்கள். (சி)

டென்மார்க்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து ஐரோப்பிய நாடுகள் பல தமது நாடுகளிலுள்ள இலங்கையரை திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சுவிஸை தொடர்ந்து நெதர்லாந்து அரசு தமது நாட்டிலுள்ள இலங்கையரை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டது. தற்போது டென்மார்க் இந்த விடயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

டென்மார்க் அரசின் இந்த முடிவினை மறுபரிசீலனை செய்யுமாறு அங்குள்ள தமிழ் அகதிகள் டென்மார்க் அரசிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ம-வி)

முல்லையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் மேஜர் தொண்டைமான் அல்லது இந்திரன் (சதாசிவம் கஜேந்திரன் வசாவிளான்) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேவேளை கடந்த 23ம் திகதியன்று காலை 8 மணியளவில் மட்டு. கதிரவெளி வெருகம்புல் என்ற இடத்தில் இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தியதில் வீரவேங்கை குமார் அல்லது [illegible] என அழைக்கப்படும் மட்டக்களப்பை சேர்ந்த சின்னையா குணரத்தினம் என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். -சி

உயிராயுதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] சம்பவங்களை மிகவும் தரமானமுறையில் எடுக்கப்பட்ட படங்களை தொகுத்து விவரணச் சித்திரமாக வெளிவந்துள்ளது.

இந் நாடகத்தை சகல மக்களும் பார்க்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் இந்நாடகம் மக்களை இலகுவாகச் சென்றடைய சகல ஒளிப்பதிவு நாடா விநியோகஸ்தர்களும் முழுமையாக ஒத்துழைப்பு நல்கவேண்டுமென நிதர்சனம் கேட்டுள்ளது. (சி)

தபால் மூல

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யாண தேர்தல் அதிகாரிக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தை அனுப்பி வைப்பதற்கு கொழும்பு கச்சேரி ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

எனவே தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் இந்த [illegible]க்கு முன்னர் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சி

உலககிண்ண போட்டி இன்றைய ஆட்டங்கள்

(நியூயோர்க்)

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் 2வது சுற்றில் இன்று நடைபெறும் இரு ஆட்டங்களின் விபரம் வருமாறு:

ஒரு போட்டியில் சவுதி அரேபியாவை எதிர்த்து சுவீடன் மோதும். மற்றொரு ஆட்டத்தில் றுமேனியாவை எதிர்த்து ஆர்ஜென்ரீனாவும் மோதும். வி

தொடரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

பி. பி. சி. நிருபர் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்றபோது இந்த பொலிஸ் அதிகாரியை நேரில் சந்தித்து உரையாடினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: யாழ்ப்பாண மக்கள் மிகவும் துன்பகரமாக வாழ்கிறார்கள். அவர்கள் வசதிகளை இழந்தும் போதிய உணவுப்பொருட்களின்றி அவதிப்படுகிறார்கள் என்றும் கூறினார். (ம-வி)

ஐ.தே.கவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கையில்: வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்தி, அரசியல் தீர்வு காண முயலவேண்டும்" என்பதோடு ஆட்சி மக்களிடமே செல்லவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

[illegible] சக்திகளும் ஐக்கிய தேசியக் கட்சியினை எதிர்க்க இருக்கின்றன.

இதேவேளை ஜனதா மிதுரு அமைப்பினர் பொதுசன முன்னணிக்கு ஆதரவு தெரிவிக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். -ம-வி

[illegible] தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பனிகள் உட்பட 150 உயர் தொழில் புரிபவர்களே அங்கு சமூகமளித்திருந்தனராம்.

அறிஞர்களின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகார துஷ்பிரயோகங்கள் தடையாக இருக்கின்றது என்றும், இத்தகைய துஷ்பிரயோகங்களினால் பல திட்டங்கள் தாமதமடைகின்றன என்று ஜனாதிபதி உயர் தொழிற்புரிபவர்களின் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார். -ம-வி

றுவாண்டாகொலை விசாரணை ஐ. நா. சபை அறிவிப்பு

(நியூயோர்க்)

றுவாண்டாவில் ஐந்து லட்சம் மக்களை கொன்று குவித்த கொலையாளிகள் மீது விசாரணை நடத்தப்படுமென ஐ.நா. செயலாளர் அறிவித்துள்ளார்.

றுவாண்டாவில் இப்படுகொலைகளைச் செய்தவர்களை இனங்கண்டு தண்டனை வழங்குவதற்கு பாரபட்சமற்ற விசாரணை நடாத்துவதற்கு ஐ.நா. சபை ஒருமனதாகவே அனுமதி வழங்கியுள்ளது. விசாரணைக் கமிஷன் வரையில் நியமிக்கப்படுமென்று கூறினார். (வி-சி)

கிளிநொச்சியில் தொழுநோய்

(பண்டத்தரிப்பு)

கிளிநொச்சி சுகாதாரபிராந்தியத்தில் தொழுநோய்த்தடுப்பு வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அண்மையில் கிளிநொச்சி திருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் பற்றிய ஆய்வு ஒன்றின்போது நான்கு பேருக்கு தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகவும் இதனை அடுத்து இப்பகுதியில் தீவிர தடுப்புமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -72

கரும்புலி நாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதை விடுதலைப் போராட்ட மாவீரர்களை ஏற்றித் துதிப்போம். அந்த மாவீர மறவர்களின் சாதனைகளின் மகிமைகளைப் பேச கேட்டுத் துதிப்போம் இவ்வாறு மாவீரர்ப்பணிமனை யாழ் மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இத்தினத்தையொட்டி தேசியக்கொடிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் [illegible] இயக்கத்துறைச் செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தமிழீழ தேசியக்கொடி 22 அடி உயரக் கம்பத்தில் கொடியிலுள்ள புலியின் பார்வை கம்பத்திற்கு எதிர்த் திசையில் நோக்கும் வண்ணம் கீழிருந்து [illegible] கொண்டிருந்தபடியே மக்கள் எல்லோரும் எழுந்து நின்று வணக்கம் கொடி ஏற்றுவர் கொடிக்கம்பத்திற்கும் மக்களிற்கும் இடையில் நிற்காது மக்களைப் பார்க்கும் நிலையில் நின்று கொடியை ஏற்ற வேண்டும் என்றும் இத்தொடர் வேற்ற நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக நிற்போர் இக்கொடியேற்றும் வைபவங்களை நாம் நடுப்பதற்றோடும், தேசிய உணர்வோடும் நின்று ஏனைய [illegible] தவறுகட ஏற்படாதவாறு சிறப்பாக நிகழ்த்த வேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர். சி

அரசு மற்றும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜேர்மனி, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் ரெண்டர் கோரியபோது புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது.

பல அரசியல் படுகொலைகள் இடம்பெற்றுள்ளதால் ஜனாதிபதி பல நெருக்கடிகளை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகள், காணாமல் போனவர்கள் பற்றி விசாரணைகள் மேற்கொள்ளாது இருந்தமை.

1988ம் 89ம் ஆண்டு காலத்தில் ஜே. வி. பி மீது எவ்வித விசாரணையுமின்றி அவர்களை படுகொலை செய்தது, பல வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு பல நிறுவனங்கள் விற்கப்பட்டதோடு, பல [illegible] என்ற பிரைஸ்' ஸ்தாபனம் ஜனாதிபதியின் மருமகனுக்கு சொந்தமாக இருந்தது போன்றவை உட்பட பல குற்றச்சாட்டுகளை அந்த உலக ஸ்தாபனம் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. -ம-வி

யாழ் ஸ்ரீதரில்...
காலை: 10.30 காட்சியாக
"மே ஒளிவீச்சு"
மாலை 4.00 மணி காட்சியாக
★ உயிராயுதம் ★
மாலை 6.00 மணி காட்சியாக
"JURASSIC PARK"
காண்பிக்கப்படும்
[எ 4188]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜூலை மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number [illegible]/10336/[illegible]